**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று,தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அவசியமானதாகும்.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 இன் 09 ஆம் இலக்க பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகள் இந்த அமைச்சின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 1985 இன் 09 ஆம் இலக்கப் பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 09 ஆம் பிரிவு | தமது கடமைகளைச் செய்யும் போது காயமடைந்த அல்லது கொல்லப்பட்ட ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் குடும்பங்களிற்கு நன்மைகளை வழங்குவதற்கு மேலதிகமாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு மற்றும் சான்றுப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு மீளாய்வாண்டிற்குள் செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | தேசியப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு மற்றும் சான்றுப்படுத்துவதற்கு ஆளுநர் சபைக்கு உரித்தான செயற்பாடுகள் தொடர்பாக அடுத்த ஆளுநர் சபைக் கூட்டத்தில் கவனங் கோரப்படுவதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 1985 இன் 09 ஆம் இலக்கத் தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 262(2) | உறுதிச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்தல் தொடர்பாக ஏற்படக் கூடிய இரட்டைக் கொடுப்பனவுகள் உட்பட்ட பிழைகளைக் குறைப்பதற்கு நிதிப்பிரமாணம் 261(1) மற்றும் 262(2) மூலம் காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் பின்பற்றப்படாமையுடன் ரூபா 48,236,368 பெறுமதியான கொடுப்பனவுகள் 24 சந்தர்ப்பங்களில் காணப்பட்டிருந்தமை மாதிரிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அனைத்து உறுதிச் சீட்டுக்கள் மற்றும் அதற்கான பதிவேடுகளில் கொடுப்பனவு செய்யப்பட்டு முத்திரை ஒட்டப்படுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 262(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | நிதிப்பிரமாணம் 392(அ), (இ) மற்றும் 393 | காசோலைகளை இரத்துச் செய்தல் அல்லது தொலைந்தமை காரணமாக பதில் காசோலையொன்று வழங்கப்படும் போது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது மொத்தப் பெறுமதி ரூபா 54,420 இற்கான 14 காசோலைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நீண்டகாலமாக கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ள துடன் கணக்குகளைத் தீர்க்கும் நோக்கத்திற்காகப் பதில் காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 392(அ), (இ) மற்றும் 393 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 395(இ) | நிதியத்தின் வங்கிக் கணக்கு தொடர்பாக இணக்கக்கூற்று குறிப்பிட்ட காலத்திற்குள் தயாரிக்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை. அதனால் செல்லுபடியாகும் காலத்திற்குள் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்தல் தவிர்க்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வங்கி இணக்கம் தயாரிக்கப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது . | நிதிப்பிரமாணம் 395(இ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 79,023,742 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 74,497,183 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,526,559 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 14,780,429 ஆல் குறைவடைந்தமையே பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | ''விருசிசு பிரதீப புலமைப் பரிசில்'' செயற்திட்டத்தின் கீழ் பொலிசாரின் 2019 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 150 பிள்ளைகளுக்கு ரூபா 25,000 வீதம் புலமைப் | நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டிற்குள் பலன்களை வழங்குதல் நடைபெறவில்லை. புலமைப்பரிசில் வழங்குவதை மிக விரைவில் மேற்கொள்ளப் | அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசில் உதவிகள் வழங்குதல் 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்குள் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 வரையில் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் உதவிகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. 2019 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் முடிவுகள் 2019 செப்டெம்பர் மாதம் வெளியிடப்பட்டிருந்ததுடன் முடிவுகள் வெளியிடப்பட்டு 1 வருடம் 3 மாதத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்த போதிலும், புலமைப்பரிசில் உதவிகளுக்கான பலன்கள் உரிய நேரத்தில் பயன்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | மரணித்த மற்றும் ஊனமுற்ற முப்படையினர் பொலிசார் மற்றும் அரச ஊழியர்களின் பாதியில் முடிக்கப்பட்ட 322 வீடுகளைப் பூரணப்படுத்துவதற்காக ரூபா 750,000 வீதம் உதவிப்பணம் 3 தவணைகளின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டு முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 321 வீடுகளுக்காக இறுதித் தவணைப் பணம் செலுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் இப்பணிகளின் நிதிச் செயலாற்றல் நூற்றுக்கு 64 வீதமான மட்டத்தில் காணப்பட்டதுடன் எதிர்பார்த்த பௌதீகச் செயலாற்றல் மட்டம் அடையப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிலிருந்து காணப்பட்டு வருகின்ற கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக பயனாளிகளான பொலிஸ் காரரினால் அவர்களது வீடுகளிற்கான நிர்மாணத்தை முடிப்பதற்கு தாமதமாகியதால் தவணைப் பணம் வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நர்ட் தொழில்நுட்ப பரிமாற்றத்தில் சுயதொழில்களில் பயன்படுத்துவதற்காக 500 தனிப்பட்டவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 24 தனிப்பட்டவர்களுக்கு மட்டுமே பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய சுகாதார நிலைமையை கருத்திற் கொண்டு மிகுதி 33 பொலிசாருக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்தின் நடவடிக்கை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பதவியணி மட்டும் சேவைக்கு அழைக்கப்பட்டமையால் அந்தக் கணக்காய்வுப் பரிசோதனை திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படவில்லை. | நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்று முறையாக செயற்படுத்தப்பட்டு வருகின்றதா எனப் பரிசோதிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வொன்று திட்டமிட்டபடி செயற்படுத்தப்படல் வேண்டும். |